வரையறுக்கப்பட்ட ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனி - 2024/2025

---------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனியின் ("கம்பனி") 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2025 மார்ச் 31 இல் 09 மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கம்பனிக்குக் கிடைக்கின்ற நிதி முற்பெறுவனவு (Receipt in Advance) பெயரிலான கட்டுப்பாட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட பின்னர் விற்பனைகளை உள்ளடக்கிய | ஏற்றுக் கொள்கின்றோம். மீதிப் பெறுவனவுக் கணக்கில் சகல விற்பனைகளுக்காகவும் கிடைக்க வேண்டிய பணம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த மீதியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் | பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஏனைய வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நிதி ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் அந்தக் கணக்கில் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படாத கம்பனிக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 27,992,228 தீர்த்து வைக்கப்படாமல் மீதியாக காணப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் விற்பனைப் பெறுமதியின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வில் முடியாது இருந்தது. | பணம் செலுத்தி பணத்தை காண்பித்து விற்பனையாக விநியோகிக்கப்படாத உரப் போக்குவரத்திற்கு உரிய பணமே மீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் தொகுதியின் விடயங்கள் மற்றும் மாற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது கொள்வனவு மற்றும் விற்பனைகள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் உரப் பெறுவனவு (GRN) மற்றும் விநியோகித்தல் (Dispatch) மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது கம்பனியால் கொள்வனவு மற்றும் விற்பனை இனங்காணப்படாமல் உரத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் பணம் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தின் போது கொள்வனவு மற்றும் விற்பனைக் கணக்கில் இடப்பட்டுள்ளதுடன் ஆண்டின் இறுதியில் மாத்திரம் அட்டுறு மற்றும் பெற வேண்டிய பெறுமதி பேரேட்டுக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | தற்போது இந்த GRN மற்றும் Dispatch ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தின் போது சுயமாக நாளது வரையாக்கப்படுகின்றது. | இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியால் மீளாய்வாண்டுக் காலப்பகுதியின் இறுதி திகதியில் வழங்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் திறைசேரி உண்டியல் மற்றும் REPO முதலீட்டின் பெறுமதி மற்றும் அந்த உண்டியல்களுக்கு உரிய பெற வேண்டிய வட்டி வருமானம் நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விட முறையே ரூபா 39,622,953 இனாலும், ரூபா 4,452,958 இனாலும் குறைவடைந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 44,075,911 இனாலும் ஆண்டின் இலாபம் ரூபா 4,452,958 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப் பகுதிக்குரிய முதலீட்டுப் பெறுமதி மற்றும் வட்டி வருமானம் சரியாக உறுதிப்படுத்தி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | காலப் பகுதியின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல் மற்றும் REPO வட்டி வருமான மீதியில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 3,814,272 மற்றும் வட்டி வருமானம் மீளாய்வாண்டு காலப்பகுதியின் வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் மிகைக் கணப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் பெற வேண்டிய வட்டி வருமானம் ஆன ரூபா 47,398,980 பெறுமதி இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 51,213,252 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப் பகுதிக்கு உரிய வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 486,567,428 | இது தொடர்பாக மேலதிகக் கவனம் செலுத்தி எதிர்வரும் | காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி வருமானத்தில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானமான ரூபா 295,818,965 பெறுமதி உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிதி செயற்பாடுகளின் கீழ் ஆன காசுப் பாய்ச்சலில் காசு உட்பாய்ச்சல் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | கணக்காண்டின் போது சரியான பிரகாரம் காசுப் பாய்ச்சலை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பிரகாரம் கணிப்பிடப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்படப்படல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் மக்கள் வங்கியிலும், இலங்கை வங்கியிலும் பேணிச் செல்லப்படுகின்ற நிலையான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம், மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் கூட்டு மொத்தமான மீதியை விட ரூபா 197,869,358 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டித் தொகை நிலையான வைப்புக் கணக்கில் குறிப்பிடப்படாமையின் காரணமாக அப் பெறுமதி குறை மதிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | காலப் பகுதிக்குரிய சொத்துக்களின் சரியான பெறுமதியை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | வட்டி வருமானம் கணிப்பிடல் பட்டோலையின் பிரகாரம் மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய கணிப்பீடு செய்யப்பட்ட நிலையான வைப்பு வருமானம் ரூபா 59,523,629 குறைத்து கணக்குகளில் செய்யப்பட்டதன் காரணமாக காலப் பகுதியின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 59,523,629 இனால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | காலப் பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய வட்டி மற்றும் வட்டி வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு காலப் பகுதியில் செலவினக் கணக்கில் ஒன்றிணைந்த கம்பனி இரண்டிற்கும் உரிய முன்னைய காலப் பகுதிக்குரிய செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டு காலப் பகுதியின் இலாபம் ரூபா 16,431,150 இனால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். இந்த செலவினங்கள் முன்னைய காலப் பகுதிக்காக அட்டுறு வைக்கப்படாமையின் காரணமாக இந்த வழுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப் பகுதிக்குரிய செலவினங்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | கம்பனியின் முகாமைத்துவத் தகவல் முறைமையை | நடைமுறை வேலைக் கணக்கிற்காக கற்பனைச் | காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப் |

| | | | |
|---|---|---|---|
| | ஸ்தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா 5,100,000 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு காலப் பகுதியில் அவ்வாறான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 5,100,000 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வழுக்கள் ஏற்பட்டிருந்தது. | பாய்ச்சல் காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக கணிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | மேலே (எ) இல் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமை ஸ்தாபிக்கும் போது கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி ரூபா 5,100,000 ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் மொத்த ஒப்பந்தப் பெறுமதியும் கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட்டமையால் கற்பனைச் சொத்துக்கள் அப் பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்ததுடன் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,020,000 அட்டுறு செலவினம் மற்றும் எஞ்சியிருந்த ஏனைய கடன் கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக பூர்த்தி அடையாத வேலை ரூபா 1,020,000 இனால் குறைக் கணிப்பீடு மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 4,080,000 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்ள வில்லை. ஏப்ரல் 24 ஆந் திகதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,020,000 தொகை மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய செலவினமாக இருந்தமையால் அட்டுறுவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | காலப் பகுதிக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | 2024 யூலை மாதம் 04 மற்றும் 2024 யூலை மாதம் 05 என்ற திகதிகளில் கம்பனிக்கு கிடைக்கப் பெற்ற கொள்வனவுக் கட்டளை இலக்கம் 2560 இன் கீழ் SA (Sulphate of Ammonia) உரம் மெற்றிக்தொன் 125 இற்கு உரிய ரூபா 8,029,660 நடப்பாண்டு காலப் பகுதியில் கொள்வனவாக இனங்காணப்படாமையின் | இரண்டு கம்பனிகளில் ஒன்றிணைக்கப்பட்ட திகதிக்கு அண்மையில் உள்ள கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக சில நடைமுறைப் பிரச்சனைகளின் அடிப்படையில் பொருள் பெறுவனவு கட்டளை | காலப் பகுதிக்குரிய கொள்வனவுகள் சரியாக இனங்கண்டு கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக காலப் பகுதியின் இலாபம் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | விநியோகிக்கும் போது ஏற்பட்டிருந்த தாமத வழுவின் அடிப்படையில் அந்த அறிவித்தல்களின் திகதி மாற்றமடைந்துள்ளது. | |
| (ஒ) | ஒன்றிணைந்த கம்பனியின் ஆரம்ப மீதி பழைய உரக் கம்பனி இரண்டினதும் இறுதி மீதி உடன் ஒப்பீடு செய்த போது நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களின் பெறுமதி ரூபா 35,247,373 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அப் பெறுமதியில் கம்பனியின் உரித்து குறை மதிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | அந்த வேறுபாட்டிற்கு முன்னைய ஆண்டிற்காக உரியதாக மேற்கொள்ளப்பட்ட செலவின தொகுதி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களை குறைக்கப்பட்டு கணக்காய்வு கணக்கிற்காக வழங்கப்பட்டமையால் ஏற்பட்டு இருந்தது. | ஒன்றிணைந்த கம்பனியின் ஆரம்ப மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | களஞ்சியப் பொறுப்பாளரால் கம்பனியின் வைக்கப்பட்டிருந்த பிணை வைப்பு, சேமிப்பு கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்தக் கணக்குகளில் 2024 யூலை 01 இல் உள்ளவாறு ரூபா 4,248,601 மீதி ஒன்று காணப்பட்டது. அதில் கட்டாய ஓய்வூதிய இழப்பீடு முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் விலகிச் சென்ற 53 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,747,400 பிணை வைப்பு சேமிப்பு கணக்கின் மீதியின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகைக்குரிய வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் பிணை வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப் பகுதிக்கு உரிய பிணை வைப்புக் கொடுப்பனவுகள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | ஒன்றிணைந்த கம்பனி இரண்டிற்கும் உரிய 03 முதல் 05 வருடங்கள் | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர் வரும் | செலுத்த வேண்டிய பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலப் பகுதியில் இருந்து கொண்டு வரப்படுகின்ற உரித்துக் கோரப்படாத ரூபா 2,865,850 மீள செலுத்தப்படுகின்ற கேள்வி பிணை வைப்புத் தொடர்பாக உரிய தரப்பினரிடம் இருந்து விசாரணை மேற்கொண்ட பின்னர் மீள செலுத்துவதற்கோ அல்லது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலம் முதல் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இலாபத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கு களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் மூலம் நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய அம்பாந்தோட்டை வாடகைக் காணியின் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தேவை ஒன்று காணப்படாது இருந்ததாக பின்னர் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,732,901 ஆரம்ப செலவினம் ஒன்று நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்தும் மூலதன பூர்த்தியடையாத வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டதுடன் உரிய வாடகைக் காணியை மீண்டும் கையளிப்பதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். வாடகைக் காணியை மீண்டும் கையளிப்பதற்காக மகாவலி அதிகார சபைக்கு கணக்காய்வுத் திகதியளவில் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் தற்போது சில பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணியை கையளிக்கும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வங்கிக் கடன் மீதி | 15,403,979,534 | 15,371,541,427 | 32,438,106 | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப் படுத்தல்களின் பிரகாரம் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.5 பொருத்தமற்ற மதிப்பீடு அல்லது மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வ/ப லங்கா உரக் கம்பனி மற்றும் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி 2024 யூலை 01 முதல் வ/ப அரச உரக் கம்பனி என்ற பெயரில் ஒன்றிணைக்கும் போது இரண்டு கம்பனிக்கும் இடையே ஏற்பட்டிருந்த கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் வ/ப லங்கா உரக் கம்பனி என்ற பெயரில் வியாபார கடன் பட்டோர் என்ற மீதியில் ரூபா 240,570 கடன் பட்டோர் மீதியாக இருந்ததுடன் அதற்குரிய ஒதுக்கீட்டில் ரூபா 4,857,456 மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் அதன் சரியான தன்மை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் முடியாது இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய ஒன்றிணைந்த கம்பனியின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கமநல சேவை நிலையங்களில் இருந்து கம்பனிக்கு அறவிட வேண்டிய கடன் மீதி | 515,625,263 | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கடன் பட்டோர் மீதியில் 259 கமநல சேவை நிலையங்களுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 204,165,411 கடன் மீதியை உள்ளடக்கி பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அந்த நிலையங்களினால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய அவ்வாறான கடன் மீதி காணப்படாமையின் காரணமாக அந்த மீதியின் சரியான தன்மை மற்றும் இருப்பு தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கணக்காய்வில் முடியாது இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். இந்த கணக்காய்வு ஐயவினாவிற்குரிய விரிவான பதில் இணைப்பு மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | இந்த மீதியை உறுதிப் படுத்துவதற்கு உரித்தான சான்றுகள் தாமதம் இன்றி வழங்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்ட 05 வருடங்களை விஞ்சிய 2008 மற்றும் 2022 காலப் பகுதிக்கு உரிய ரூபா 7,694,697 ஆன நானாவித கடன் பட்டோர் மீதியை உறுதிப்படுத்திய பின்னர் தீர்த்து வைப்பதற்கு அல்லது உரிய முறைமையின் பிரகாரம் கடன் கொடுத்தோர் மீதியை பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். இதில் குறிப்பிடப்பட்ட கடன்கொடுத்தோர் பெறுமதிக்கு உரிய எஞ்சியிருந்த தொகையினை பரீட்சித்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மானிய முறையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட TSP உர இருப்பில் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட மெற்றிக்தொன் 1333 இற்காக செலுத்த வேண்டிய பணம் ரூபா 83,000,000 கம்பனியால் மீளாய்வாண்டு காலப் பகுதியின் இறுதி வரையிலும் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனியால் TSP உரத்திற்காக இது வரை பணம் பொதுத் திறைசேரிக்கு இந்த உரக் கம்பனிக்கு கையளிப்பதற்கு அங்கீகாரம் பெறப்படாமையினால் செலுத்தப்படவில்லை. | திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டிய பெறுமதி கால ரீதியில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் 09 மாதங்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 385,225,727 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் 09 மாத காலப் பகுதிக்காக வ/ப லங்கா உரக் கம்பனி மற்றும் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் இலாபத்தின் கூட்டு மொத்தம் ரூபா 325,374,372 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 59,851,355 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானம் அதிகரித்தமை மற்றும் விற்பனைக் கிரயம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடலுக்கு சாதகமான உள்நாட்டு உரத்தை கொள்வனவு செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2021/2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை, ஹொரவப்பொத்தானை, மதவாச்சி, நொச்சியாகம, பதுளை, மட்டக்களப்பு, தெஹிகஹலந்த, கோண்டாவில், ஹிங்குரக்கொட மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச களஞ்சியங்களில் மேலதிகமாக விற்பனை செய்யப்படாமல் எஞ்சிக் காணப்படுகின்ற சேதன பசளையின் அளவு மெற்றிக்தொன் 2487 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி ரூபா 32,835,355 ஆகும். கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் அந்த உரம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். அரச நிறுவனம், பண்ணைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எஞ்சிக் காணப்படுகின்ற உரம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப் படாமல் 2023 திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வரையில் காலாவதியாகி இருந்த பெறுமதி ரூபா 5,095,300 ஆன மில்லிலீற்றர் 500 திரவ உரம் போத்தல் 2510 கம்பனியின் களஞ்சியங்களில் காணப்பட்ட போதும் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கலாவதியான கரைசல் உரத்தின் அளவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| புதிய கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 181 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் முழுமையான உரித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான பிரதான தொழில் முயற்சி ஒன்றான இந்தக் கம்பனிக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் அங்கீகரிக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 04 ஆந் திகதியில் கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 161 ஆகும். அதன் பிரகாரம் 20 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஸ்ட நிலையில் 10 பதவிகள் மூன்றாம் நிலையில் 05 பதவிகள் இரண்டாம் நிலையில் 01 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | புதிய கம்பனிக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளையும் உள்ளடக்கி 213 பேர்களை உடைய பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளும் வகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பதவி வெற்றிடங்களுக்கு இடையே அத்தியவசிய பதவிகள் 18 இற்காக தகைமையுள்ள நபர்களை சேர்ப்பதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசை அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் விரைவாக அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | விரைவாக அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) ஈ மற்றும் 2021 நவம்பர் 16 | ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனியின் ஒன்றிணைந்த நிறுவனத்தின் நாளாந்த கணிப் பொருட்களுக்கு புறம்பாக | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதிக்கு |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரைவு வருடாந்த அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்ததுடன் 2024/2025 நிதியாண்டிற்குரிய 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்க பட வேண்டிய நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 316 நாட்களின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கபடவில்லை. | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக வரையறுக்கப் பட்ட அனுபவம் உள்ள வரையறுக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையுடன் மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் கணக்காய்வு ஐயவினாக்களில் காண்பிக்கப்படுகின்ற தாமதத்திற்கு காரணமாக இருந்தது. | பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதியமைச்சின் செயலாளரின் பொது முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான நிறுவன கட்டுப்பாட்டு வழிகாட்டியின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கி 05 வருட காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கம்பனியின் உபாய வழித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும் புதிய கம்பனிக்கு உரிய கூட்டிணைந்த உபாயவழித் திட்டம் தயாரிக்கும் பணிகள் ரூபா 4,950,000 தொகையில் வெளித் தரப்பினருக்கு கையளித்து அதில் 60 சதவீத அளவு அதாவது ரூபா 2,970,000 தொகை 2025 சனவரி 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றிணைக்கப்பட்ட கூட்டிணைந்த உபாயவழித் திட்டம் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன். அதற்கான எழுத்துமூல அங்கீகாரம் இதுவரை எங்களுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்ட ஒன்றிணைந்த கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2024/2025 நிதியாண்டிற்குரிய மூலதன பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் உரக் கலவை செய்யும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் நிதியாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர் 2025/2026 நிதியாண்டின் பாதீட்டின் மூலமும் அதற்காக நிதி ஒதுக்கி அதன் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக பெறுகை மற்றும் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைகளுக்கு உரிய கேள்வி ஆவணங்கள் தயாரித்து பூர்த்தி செய்தல் இந்த அறிக்கை விநியோகிக்கப்படுகின்ற திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட வில்லை. முன்னர் காணப்பட்ட கம்பனியால் நீண்ட காலம் முதல் கணிசமான கிரயத்தை மேற்கொண்டு மனித ஊழியத்தைப் பயன்படுத்தி உரக் கலவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்தக் கம்பனி ஒன்றிணைந்த பின்னரும் உரக் கலவை செய்யும் பணிகளுக்காக ஒரு மாத காலப் பகுதிக்காக அண்ணளவாக ரூபா 22,350,331 செலவிடப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் 2025/26 நிதியாண்டிற்காக ரூபா 125 மில்லியன் தொகை ஒன்று கலவை இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் உரத்திற்கான திறந்த சந்தையில் கலவை உர விற்பனையை அதிகரிப்பதற்கு அது இலகுவாக இருந்ததாக முகாமைத்துவத்தின் எதிர்பார்ப்பாகும். தற்போது வரையில் கலவை இயந்திரம் கொள்வனவு செய்யும் பெறுகைச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுவதுடன் கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்ட முறையில் அதன் மூலம் ரூபா 22 மில்லியனால் விற்பனைக் கிரயம் இயந்திரம் பயன்படுத்தி கலவை செயற்பாடுகளுக்காக தொடர்தும் மனித ஊழியம் மற்றும் மின்சாரத் தேவையாக இருந்ததை சுட்டிக் காட்டுகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் குறித்துரைத்த காலப் பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனி ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் 2024 யூன் 30 முதல் 2025 மார்ச் 31 வரை 09 மாத காலப் பகுதியில் ஹுணுப்பிட்டி பிரதான அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளில் 61 சதவீதம் சிறு | பல வருட காலம் முதல் அரச உரக் கம்பனியின் நேரடி மானியம் உரம் நெற் பயிர்ச் செய்கைக்காக பகிர்ந்தளித்தல் கமநல சேவை நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் | கம்பனி தனது விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்காக உபாயவழி நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைச் தேயிலைச் சபை, தெங்கு பயிர்ச் செய்கைச் சபை மற்றும் கமநல சேவை நிலையங்களுடன் மானிய விலையின் கீழ் அல்லது கடன் அடிப்படையில் உரத்தை வழங்குவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட விற்பனையாக இருந்ததுடன் புதிய கம்பனியால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட விற்பனை 39 சதவீதமான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தனியார் கம்பனியின் நேர் மற்றும் கலவை உரம் விற்பனை முகவர்கள் ஊடாக பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரச கம்பனி ஒன்றாக நிதிப்பிரமாணங்களுக்கு இணங்கியிருந்தமையால் மேற்கூறப்பட்ட பிரகாரம் கவர்ச்சிகரமான நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த முடியாமையின் காரணமாகா தனியார் துறை ஊடான விற்பனை குறைவடைந்து இருந்தது. மேலும் உர பெறுகைகளின் போது பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் உரப் பெறுகைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் தனியார் துறையினை விட உயர்ந்த விலை ஒன்று அரச உர கம்பனிக்காக வழங்குனர்கள் சமர்ப்பித்திருந்தனர். அதன் காரணமாக எமது கம்பனிக்கு கவர்ச்சிகரமான சந்தை மட்டத்தில் விற்பனை முகவர்களுக்கு வழங்குவதற்கு முடியாது இருந்தமையும் நேரடியாக உரம் விற்பனை செய்வதற்கு காரணமாக இருந்தது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் 2024/2025 நிதியாண்டில் 08 மாத காலப் பகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் அந்த காலப் பகுதியில் விற்பனை அளவு உரம் மெற்றிக்தொன் 54,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தக் காலப் பகுதிக்கு உரிய உள்ளபடியான விற்பனை அளவு உரம் மெற்றிக்தொன் 21,907 மாத்திரம் ஆகும். எனினும் அந்த பாதீட்டில் விற்பனை மேம்படுத்தலுக்காக ரூபா 42.9 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய கம்பனி ஸ்தாபிக்கும் போது அந்தக் கம்பனியின் | மெற்றிக்தொன் 20,000 யூரியா உரம் பெறுகைக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு பெறுகை வழிகாட்டிகளின் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையின் காரணமாக 2024/2025 நிதியாண்டில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாது இருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த உர பற்றாக்குறை விற்பனை வரையறுக்கப்பட்டமைக்கு காரணமாக இருந்தது.<br><br>புதிய கம்பனி ஸ்தாபிக்கும் போது அச்சிடப்பட்ட மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் | கம்பனி தமது பாதீடு செய்யப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதற்காக உபாயவழி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

மேம்படுத்துவதற்காக ரூபா 41 மில்லியனுக்கு அண்ணளவாக செலவிடப்பட்ட செலவினம் தவிர விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

மூலம் விரிவான விளம்பரங்கள் வழங்கப்பட்டதுடன் அது நேரடியாக விற்பனை வளர்ச்சியில் பங்களிக்கிறது என்பதையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதன் பிரகாரம் கம்பனி விளம்பரத்தின் போது, அந்த வியாபாரப் பெயரின் கீழ் உள்ள உரங்களும் நேரடியாக விளம்பரப்படுத்தப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.